22 மார்ச் 2020

Newbec

NEW WAY OF BEING CHURCH தவக்காலத்தின் 4 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

**கடவுள் உன்னில் பேருவகை கொண்டுள்ளார்**

# ஒளியின் மக்களாக வாழ்வோம்

கடவுளின் வழிகள் மனிதனின் வழிகளைவிட வேறுபட்டது. மனிதர்களாகிய நாம் பார்க்காத குண நலன்களை கடவுள் மனிதரில் பார்க்கின்றார். தாவீதை கடவுள் தேர்ந்தெடுத்த கதையை நாம் வாசிக்கும்போது, "இதயத்துக்கு உகந்தவனாக" (திப:13:22) கடவுள் பார்க்கிறார். எதிர்கால அரசனைத் தேர்ந்தெடுக்கும் சவாலை ஆண்டவர் சாமுவேலுக்குத் தருகிறார்.



சாமுவேல் வெளித்தோற்றத்தைப் பார்க்கிறார். ஈசாய் தன் ஆறு புதல்வர்களையும் சாமுவேலின் முன் கொண்டுவருகிறார். ஆனால் அவர்களில் ஒருவரையும் கடவுளின் கண்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தாவீதை ஆண்டவர் தேர்ந்தெடுக்கும்போது, அவர் தோற்றத்தைப் பார்க்கவில்லை. உள்ளத்தை மட்டுமே பார்க்கிறார் என்று நாம் உணர்ந்துகொள்கிறோம்.

இதுபோன்ற குருட்டுமனப்பான்மை இன்றளவும் தொடர்கிறது. பளபளக்கும் உடைகள், ஆடம்பரமான கார்களின் பின்னால் இருக்கும் உணர்வுக் குறைபாட்டைக் காணத் தவறிவிட்டோம். தனிமையான தாயின் பின்னால் மறைந்திருக்கும் துன்பங்களைக் காணத் தவறிவிட்டோம். பரபரப்பான பெற்றோருடன் இணைவதற்காக காத்திருந்து, அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து மன சோர்வுடன் இருக்கும் இளைஞனின் பின்னாலிருக்கும் வலியைக் காணத் தவறிவிட்டோம்.

நாம் பார்க்க விரும்புகிறோமா? பார்க்க வேண்டாம் என்று நாம் தேர்வு செய்கிறோமா? எப்போது பார்ப்போம்?

இன்றைய நற்செய்தியில் இயேசு, பிறவிக்குருடனுக்கு உமிழ் நீரால் சேறுண்டாக்கி அதை அவனுடைய கண்களில் பூசி, சிலோவாம் குளத்திற்கு சென்று கழுவச் சொல்கிறார். அவ்வாறு செய்யவே, பிறவிக்குருடன் பார்வை பெற்றான். என்னே மகிழ்ச்சி!

மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக, எவ்வாறு குணமடைந்தான் என்று கேட்டு இயேசுவை குற்றம் சாட்டுகிறார்கள் பரிசேயர்கள். இவ்வாறு நடக்கும் என்று எதிர்பார்த்ததுதான். ஆனாலும் நாம் தொடர்ந்து செல்கிறோம். ஆயனான ஆண்டவர் நம்மோடு இருக்கும்போது, இருளின் பள்ளத்தாக்கில் நாம் நடக்க நேர்ந்தாலும், பயமில்லை. அவருடைய கோலும் நெடுங்கழியும் நம்மைத் தேற்றும்.

தாவீது கடவுள் மீது கொண்ட முழு நம்பிக்கையால், கடவுள் விரும்பிய அனைத்தையும் செய்தார். கடவுள் மீது தாவீது கொண்டிருந்த நம்பிக்கை, கடவுளை மகிழ்ச்சிப்படுத்தியது. தாவீது கொண்டிருந்த நம்பிக்கைக்கு, கடவுள் அவருக்கு வெகுமதியளித்தார். ஒளியின் மக்களாக நாம் வாழும்போது, நம் வாழ்வில் வளமும், நன்மைத்தனமும், நேர்மையும், ஒளியும் பன்மடங்கு பெருகும். ✝

இருளை ஒளியால் மட்டுமே விரட்டமுடியும். வெறுப்பை அன்பால் மட்டுமே வெல்லமுடியும்.

– புனித 2 ஆம் ஜோன் போல்

**இன்றைய வாசகங்கள்:**

1 சாமுவேல்: 16: 1(a) 6-7,10-13(b)

திருப்பாடல்: 23: 1-3(a) 3(b)-4,5,6(1)

எபேசியர்: 5: 8-14

யோவான்: 9: 1-41

**வாரம் ஒரு வசனம்**

பார்க்க வேண்டாம் என்று நாம் தேர்வு செய்கிறோமா?

INTERNAL CIRCULATION ONLY
BUL 12/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 மார்ச் (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
***கடவுள் உன்னில் பேருவகை கொண்டுள்ளார்***

**பங்கு அலுவலக நேரம்**

திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: தவக்காலம் 4ஆம் ஞாயிறு 21 – 29 மார்ச் 2020**

1 சாமு 16: 1, 6-7, 10-13 தி.பா: 23: 1-3, 4, 5, 6 எபே 5: 8-14 யோவான் : 9: 1-41

**" ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை." - தி.பா 23**

| | | | |
|---|---|---|---|
| சனி | 21 | **திருப்பலி நடைபெறாது** | |
| ஞாயிறு | 22 | **திருப்பலி நடைபெறாது** | **மறைக்கல்வி , மற்றும் கிறிஸ்தவ புகுமுக வேட்பாளர்கள் வகுப்புகள் நடைபெறாது** |
| திங்கள் | 23 | திருப்பலி நடைபெறாது | |
| செவ் | 24 | திருப்பலி நடைபெறாது | |
| புதன் | 25 | திருப்பலி நடைபெறாது | |
| வியா | 26 | திருப்பலி நடைபெறாது | |
| வெள் | 27 | திருப்பலி நடைபெறாது | |

**தவக்காலம் 5ஆம் ஞாயிறு**

எசேக் 37: 12-14 தி.பா: 130: 1-2, 3-4, 5-6, 7-8 உரோ 8: 8-11 யோவான் 11: 1-45

**" ஆண்டவரிடமே போன்பும் மீட்பும் உள்ளது." - தி.பா 130**

| | | | |
|---|---|---|---|
| சனி | 28 | **திருப்பலி நடைபெறாது** | |
| ஞாயிறு | 29 | **திருப்பலி நடைபெறாது** | **மறைக்கல்வி , மற்றும் கிறிஸ்தவ புகுமுக வேட்பாளர்கள் வகுப்புகள் நடைபெறாது** |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2020 மார்ச் *(பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்***

1. **பங்கு காணிக்கை:**
   14/15 மார்ச் ________

   இறைவன் அனைத்து தாரா‌ள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

2. அதிச க்களில் மாதம் ஒரு முறை ஒன்றுகூடி, மாதாந்திர சிந்தனைத் தாளைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

3) **பமமேப உணவு வங்கி:** பங்கின் மனித வள மேம்பாட்டின் உணவு வங்கிக்கு நீங்கள் தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவுக்கு மிக்க நன்றி. எங்களுக்கு தேவை யானவை: அரிசி,மைலோ, பால்மாவு, போத்தல் சமையல் எண்ணெய், சார்டின், பிஸ்கெட்டுகள். எந்த அளவுகளில் வேண்டுமானாலும் நீங்கள் வழங்கலாம். கூடுதல் விவரங்களுக்கு: ஜோன் டேவிட்சன் ( 017-615 8961) பென்னதெத்( 012-2715840) இவர்களைத் தொடர்பு கொள்ளவும். தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

4) **பங்கு அலுவலகம் 2020 மார்ச் 18 - 31 வரை, மூடப்பட்டிருக்கும்** அவசர உதவிகளுக்காக அழைக்க: நாதன் (012-684 0750) அல்லது கொலின்ஸ் (016 364 7506)

5) **விவிலிய அறையை ஆராதனை இல்லம்/ தியான இல்லமாக மாற்ற தேவைப்படும் சீரமைப்பு செலவுகளுக்காக,** உங்களிடமிருந்து நன் கொடைகளை எதிர்ப்பார்க்கின்றோம். தற்சமயம் இதற்கான நிதியை இனையத்திவழியாக பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.***

ஜோன் ரவி இறப்பு 14-03-2020

***முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக***

➢ **சிரம்பான், மினவுதல் தேவாலய பங்கு மக்கள் அனைவருக்கும்.**

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே

**திருப்பலிகள், ஆலய நடவடிக்கைகள் ஆகியவை இரத்து செய்யப்பட்டுள்ள வேளையில் கூடுதலாக இப்போது வெளி நடமாட்டங்களும் இருக்கக்கூடாது**

கடந்த ஞாயிறு, திருப்பலிகள் நடைபெறவில்லை என்பதை ஏற்கெனவே அறிந்துள்ள இவ்வேளையில் அரசாங்கம் இப்போது யாரும் வெளியே நடமாடக்கூடாது என்று அறிவுத்தியுள்ளது.

தீபகற்ப மலேசியாவில் உள்ள 3 ஆயர்களும் இணைந்து அனைத்து விசுவாசிகளுக்கும் எழுதிய கடிதத்தின்படி, உங்கள் பங்குத் தந்தையாகிய நான் தொடர்ந்து என்னுடைய தனிப்பட்ட திருப்பலியை உங்கள் அனைவரின் கருத்துகளுக்காகவும் ஒப்புக்கொடுக்கிறேன். இந்த மார்ச் மாதம் வரை தொடர்ந்து இவ்வாறு ஒப்புக்கொடுப்பேன். ஒவ்வொரு வாரமும் திருப்பலியின் போது நீங்கள் வழங்கிக் கொண்டிருந்த காணிக்கை, திருப்பலி கருத்துகள், மற்றும் உங்கள் நிதியைத் தர விரும்புவோர் பங்கின் வங்கிக் கணக்கில் இணையத்தின்மூலம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1.வங்கியின் பெயர்: | **Public Bank Berhad** |
| 2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: | **Church of Visitation** |
| 3.வங்கிக் கணக்கு எண் : | **3121194612** |

உங்களின் இணையத்தின் வழி பணம் செலுத்தும்போது, கீழ்க்கண்ட தகவல்களை தெரிவியுங்கள்.இதனால் பங்கு அலுவலகத்தின் கணக்குகளை சரிபார்க்க முடியும்.

1. செலுத்தும் தொகை
2. பணம் செலுத்தும் நோக்கம் ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று)
   அ. திருப்பலி கருத்துகள் ( பெயர்) ஆன்மா இளைப்பாற்றி/நன்றியறிதல்/ தனிப்பட்ட கருத்துகள்
   ஆ. பங்கு நன்கொடை / தியான அறை சீரமைப்பு

   தொகை செலுத்திய உங்கள் ரசீதை பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும். serembanvisitation@gmail.com

அன்பு சகோதர சகோதரிகளே, இந்த நடைமுறை மார்ச் 31 அல்லது மீண்டும் ஆலயத்தில் திருப்பலி தொடங்கும் வரை மட்டுமே. தொடர்ந்து உங்கள் அனைவரையும் என் செபத்தில் நினைவு கூருகிறேன். நீங்களும் எனக்காகவும், அருட்பணி கென்னத் மற்றும் பங்கு சமூகத்தினருக்காகவும் செபியுங்கள்.

**- மறைதிரு. சேவியர் அண்ட்ரூ**

➢ **வெளி நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்ட இந்தக் காலத்தில் இறப்பு நேரத்தில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்:**

1. இறப்புக்குப்பின் நடைபெறும் ஏழு நாள் செபவழிபாட்டுகள் இல்லத்தில் (இறப்பு இல்லம் funeral parlours) நடைபெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்கள் தங்கள் இல்லத்தில் தனிவழிபாடாக அதை அமைத்துக்கொள்ளவேண்டும். இதற்குத் தேவையான புத்தகங்கள் பங்கிலிருந்து அல்லது அதிச விலிருந்து பெற்றுக்கொள்ளவும். இறப்பு வீட்டிற்கு வரும் நெருங்கிய உறவினர்கள் வெகு குறைவான நேரம் மட்டுமே அங்கு இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும்.
2. விழிப்பு செபம் மற்றும் இறப்புத் திருப்பலியை நிறைவேற்றும் குருக்கள் அதை குறிப்பிட்டவர்களின் இல்லத்திலேயே (இறப்பு இல்லம் funeral parlours) நிகழ்த்த வேண்டும். நாட்டில் வெளி நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ள சட்டத்தைப் பின்பற்றுவதன்வழி இது அதிகமாக மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கவும், நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்கெடுக்கவும் உதவி செய்யும். ஏனென்றால் ஆலயத்தில் வழிபாடு நடைபெறுவது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
3. பிற பொதுவான சுகாதார முன்னெச்சரிக்கைகள் ( தள்ளி இருப்பது) கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும்.
4. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் முன்பதிவு செய்த திருமணங்கள் ஒத்திவைப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

➢ **நேரடி ஒளிபரப்பு: வார நாட்கள் மற்றும் வார இறுதி திருப்பலிகள்: மார்ச் 18-31 ,2020 வரை.**
**இணைய ஒளிபரப்பு: *www.Tv.ArchKL.org***

| **ஞாயிறு திருப்பலி :** | | **வார நாட்கள் திருப்பலிகள் (திங்கள் - வெள்ளி)** |
|---|---|---|
| | 7.30 காலை ( தமிழ்) | |
| | 9.00 காலை (மெண்டரின்) | 6.00 மாலை திருப்பலி (ஆங்கிலம்) |
| | 10.30 காலை (ஆங்கிலம்) | 7.00 மாலை திருப்பலி ( தேசிய மொழி) |
| | 12.00 நண்பகல் (தேசியமொழி) | |